திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# சோற்றுக்கற்றாழையால் பணமும் சேரும்

த.தேவராஜ்

First Published : 28 Oct 2010 12:00:00 AM IST



கடலூர்: தமிழ்நாட்டில் சோற்றுக் கற்றாழை என்று அழைக்கப்படும் மூலிகைச்-செடி அலோவரா, பெருமளவில் உலகம் முழுவதும் அழகு சாதனப் பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

சோற்றுக் கற்றாழையில் அலோயின், அலோசோன் என்ற வேதிப் பொருள்கள் 4 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை உள்ளன. இவ்வேதிப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அலோவரா ஜெல், அழகுசாதனங்களுக்கான மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

சூரிய ஒளியில் இருந்து வரும் கடும் வெப்பம், காமா, எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் தீய விளைவுகளில் தோலை பாதுகாக்க சோற்றுக் கற்றாழை ஜெல் பயன்படுத்தப்படுகிறது. இது தோலின் நிறத்தையும் மேம்படுத்துகிறது. எனவே சோற்றுக் கற்றாழையில் இருந்து பிரித்தெடுக்கப்படும் ரசாயனப் பொருள்கள் உலகம் முழுவதும் சருமத்துக்கான லோஷன்கள், கிரீம்கள், சோப்புகள் மற்றும் ஷாம்புகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சித்தா, ஆயுர்வேத மருத்துவங்களில் இருமல், சளி, குடல் புண் ஆகியவற்றுக்கு மருந்தாகவும், தீக்காயங்கள், வெட்டுக்காயங்கள் ஆகியவற்றுக்கு வெளிப்பூச்சு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

வளரும் நிலை: 25 முதல் 45 செல்ஷியஸ் வெப்ப நிலையில், கடல் மட்டத்தில் இருந்து 1000 அடி உயரத்தில் உள்ள பிரதேசங்களில் சோற்றுக் கற்றாழை நன்கு வளரும் தன்மை கொண்டது. நல்ல வடிகால் வசதி உள்ள எல்லா வகையான நிலங்களிலும் சோற்றுக் கற்றாழை நன்றாக வளரும் என்றாலும் தரிசுமண், மணற்பாங்கான நிலங்கள், பொறைமண் நிலங்களில் சிறப்பாக வளரும் என்று வேளாண்துறை பரிந்துரைக்கிறது.

இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் வறட்சியான பகுதிகளில் சோற்றுக் கற்றாழை வணிக ரீதியாகப் பயிரிடப்படுகிறது. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், சீனா, தென்னாப்பிரிக்கா,

இத்தாலி, கிரீஸ், உள்ளிட்ட நாடுகளில் பெருமளவு காணப்படுகிறது. இந்தியா, தென்னாப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் சோற்றுக் கற்றாழையைப் பதப்படுத்தியோ, ஜெல் தயாரித்தோ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

இந்தியாவில் தமிழ்நாடு, ராஜஸ்தான், ஆந்திரா, குஜராத் மாநிலங்களில் அதிகமாக சோற்றுக் கற்றாழை பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் ராமநாதபுரம், நெல்லை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, சேலம் மாவட்டங்களில் வணிக ரீதியாக விவசாயிகள் பயிரிடுகிறார்கள்.

விதைகள் இல்லை: சோற்றுக் கற்றாழைப் பயிரிட ஏற்ற பருவகாலம் ஜூன், ஜூலை மற்றும் செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் ஆகும். சோற்றுக் கற்றாழையில் பூக்கள் உற்பத்தியானாலும் அதன் மகரந்தங்கள் செயல் இழந்து விடுவதால், விதைகள் உருவாவது இல்லை. எனவே செடியின் பக்கக் கன்றுகளை பிரித்தெடுத்து, வளர்க்கப்படுகிறது.

இதன்படி, 3 அடி இடைவெளிக்கு ஒரு கன்று வீதம், ஹெக்டேருக்கு 10 ஆயிரம் கன்றுகள் நடவேண்டும். நிலத்தை இருமுறை உழுது, ஏக்கருக்கு 10 டன் தொழுஉரம் இட்டு, சிறு பாத்திகளில் சோற்றுக் கற்றாழை நடவேண்டும்.

இலை முதிர்ச்சி அடையும்போது, ஓரளவுக்கு வறட்சியான வானிலையில் இலைகளை சேகரித்தால், அதில் தரமான ஜெல் தயாரிக்க முடியும் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது.

சோற்றுக் கற்றாழை இலை 80 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை நீர்ச்சத்து கொண்டது. எனவே விரைவில் வீணாகும் தன்மை கொண்டது. எனவே வெகுவிரைவில் ஜெல் தயாரிக்க எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. ஏக்கருக்கு 15 டன்கள் வரை இலை கிடைக்கும்.

புதுவை மாநிலத்தில் உள்ள சோப்பு மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், கடலூர் உள்ளிட்ட அண்டை மாவட்டங்களில் இருந்து அலோவராவைக் கொள்முதல் செய்கின்றன.

திட்டக்குடி, விருத்தாசலம், பண்ருட்டி வட்டங்களில் சோற்றுக் கற்றாழைப் பயிரிட ஏற்ற தட்பவெப்ப நிலையும், தகுந்த நிலத் தன்மையும் உள்ளன. கொள்முதல் செய்யும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அலோவரா நல்ல லாபம் தரும் பயிர் என்கிறார்கள் வேளாண் துறையினர்.

**"கோ கோ' தென்னந்தோப்பு விவசாயிகளின் வரப்பிரசாதம்**

எஸ். முகம்மது கவுஸ்

First Published : 28 Oct 2010 12:00:00 AM IST



திருவள்ளூர் : நிழல் ஊடு பயிரான கோ கோ தோட்டம், தென்னந்தோப்பு வைத்துள்ள விவசாயிகளுக்கு செலவில்லாமல் அதிக லாபம் தரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடும் சாக்லேட் முதல் ஐஸ் கிரீம் வரை அனைத்திலும் கலக்கப்படுவது கோ கோ. மேலும் மருத்துவத்துக்கும், முக அழகு கிரீம்களில் கலக்கவும் கோ கோ பவுடர் பயன்படுகிறது.

இந்தியாவில் கோ கோ தோட்டப்பயிர் குறைவாக உள்ளதால் பிரேசில், மெக்சிகோ, கானா, நைஜீரியா, இந்தோனேஷியா, கேமரூன் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 60 சதவீத கோ கோ இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்த கோ கோ தோட்டப்பயிர் கோவை, திருச்சி போன்ற தமிழகத்தின் ஒரு சில மாவட்டத்தில் மட்டும் பயிரிடப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் முதல் முதலாக மப்பேடு பகுதியில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விஜயகுமார் தோட்டக்கலை வேளாண் உதவி அலுவலரின் ஆலோசனைப்படி கோ கோ பயிரிட்டு லாபம் அடைந்து வருகிறார்.

இந்த கோ கோ தோட்டம் குறித்து தோட்டக்கலை வேளாண் உதவி அலுவலர் பாபு கூறும் போது, கோ கோ செடி வளர 60 சதவீத நிழல் பகுதி தேவை. மேலும் 15 முதல் 39 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை, மழையளவு 500 முதல் 2000 மில்லி மீட்டர் வரை, வடிகால் வசதி கொண்ட செம்மண் மற்றும் வண்டல் மண் ஆகியவை இருந்தால் போதுமானது.

மேற்கண்ட சூழல் பெரும்பாலும் தென்னந்தோப்புகளில் நிலவும். ஆகையால் தென்னந் தோப்பு வைத்திருப்பவர்கள் ஊடு பயிராக கோ கோ பயிரை நடவு செய்யலாம்.

இதற்கென தனியாக எவ்வித பராமரிப்பும் இல்லை. தென்னந்தோப்புக்கு விடப்படும் தண்ணீரே இதற்கும் போதுமானது. இதற்கு சொட்டு நீர் பாசன வகையையும் பின்பற்றலாம். இரண்டு தென்னை மரங்களுக்கு நடுவில் ஒரு கோ கோ அல்லது 10 அடி இடைவெளியில் ஒரு கோ கோ செடி என பயிரிடலாம். ஒரு ஏக்கர் தென்னந் தோப்பில் 200 முதல் 250 செடிகள் வரை பயிரிடலாம்.

கோ கோ பயிர் நடவு செய்த 3 ஆண்டுகளில் பலன் கொடுக்கும் ஆற்றல் உள்ளது. 3 ஆண்டு வளர்ந்து ஒரு செடியில் 750 கிராம் கோ கோ கிடைக்கும். 5 ஆண்டு வளர்ந்த செடியில் 2 கிலோ கோ கோ கிடைக்கும். கோ கோ பொறுத்தவரையில் குறைந்தபட்ச ஆதார விலையைக் கருத்தில் கொண்டாலும் ஆண்டுக்கு ரூ. 18 ஆயிரம் முதல்

ரூ. 24 ஆயிரம் வரை வருமானம் ஈட்ட முடியும்.

மேலும் கோ கோ செடியில் இருந்து விழும் இலையில் தழைச்சத்து நுண்ணூட்டச்சத்து போன்றவை இருப்பதால் மண் வளம் பெற்று தென்னை மரமும் நல்ல அறுவடையை தரும். கோ கோ செடி வகைகளை பூச்சியினங்களும் தாக்காது. ஆகையால் தென்னந்தோப்பு விவசாயிகளுக்கு கோ கோ ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த நிழல் ஊடுபயிரான கோ கோ பயிரிட விருப்பமுள்ள விவசாயிகள் 9444227095 என்ற மொபைல் எண்ணில் அழைத்தால் தோட்டக் கலைத் துறை மூலம் அவர்களுக்கு முறையான வழிகாட்டுதல் மற்றும் உதவிகள் கிடைக்கும் என்றார் பாபு.

**"கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை 55 புதிய ரக பயிர்கள் கண்டுபிடிப்பு'**

First Published : 27 Oct 2010 02:44:35 PM IST

கோவில்பட்டி, அக். 10: கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை 55 புதியரக பயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை சாகுபடிக்காக வெளியிடப்பட்டுள்ளதாக அதன் பேராசிரியர் மற்றும் தலைவர் து.ஜவாஹர் (படம்) தெரிவித்தார்.

கோவில்பட்டியில் நடைபெற்ற வேளாண்மை கருத்துக் கண்காட்சியில் அவர் கூறியது:

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் 1901-ம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் மாதிரி பண்ணையாக துவங்கப்பட்டு, 1946-ம் ஆண்டு பருத்தி மற்றும் சிறுதானிய ஆராய்ச்சி நிலையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1981-ம் ஆண்டு முதல் இந்நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இங்கு, இதுவரை 55 புதிய ரக பயிர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் கருங்கண்ணிப் பருத்தி, கம்போடியா பருத்தி போன்றவை குறிப்பிடத்தக்கவை. சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, தினை, குதிரை வாலி, பனிவரகு, வரகு, சாமை, உளுந்து, பாசிப்பயறு, சூரியகாந்தி மற்றும் மிளகாய் உள்ளிட்ட அனைத்து மானாவாரி பயிர்களிலும் புதிய ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தற்போது, பி.டி. ரகப் பருத்தியில் கோவில்பட்டி பகுதிக்கு ஹஏற்ற ரகத்தை தெரிவு செய்து, இப்பகுஹஸ்ரீதி விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர பருத்தியில் ஒரே அறுவடையில் பஞ்சுகளை இயந்திரங்களைக் கொண்டு சேகரிக்க உகந்த பருத்தி ரகத்தை தெரிவு செய்ய ஆய்வுகள் நடைபெறுகின்றன.

மேலும், இக் கண்காட்சியில் கோடை உழவு, ஆழச்சால் அகலப்பாத்தி அமைத்தல் போன்ற மழை நீர் சேகரிப்பு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. விதை மற்றும் உரம் விதைக்கும் கருவி, களை எடுக்கும் கருவி, இயந்திர களை எடுக்கும் கருவி, சுழல் வெட்டி, சுழற்கலப்பை, அக்ரி ஸ்ரேட்டர் போன்ற கருவிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

மானாவாரியில் பருத்தி, சோளம், மக்காச்சோளம், சூரியகாந்தி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளின் சேதம் குறித்த விளக்கப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

பூச்சிகள் மற்றும் பூஞ்சான நோய்களிலிருந்து பயிரை பாதுகாக்க ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை கையாளுதல் அவசியம் என்றார் அவர்.

**கரும்பு விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரம் வழங்கப்படுமா?**

First Published : 27 Oct 2010 12:29:07 PM IST

கந்தர்வகோட்டை, அக். 26: புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதியில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரம் வழங்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கந்தர்வகோட்டை, ஆதனக்கோட்டை, பெருங்களூர், கறம்பக்குடி, ஆகிய உள்ளிட்ட பகுதிகளில் 5,000 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்துள்ளனர்.

இவர்கள் அறுவடைக்காகக் காத்திருக்கும் நிலையில், கரும்பு வெடо்ட ஆள்கள் கிடைப்பதில் சிக்கல் நிலவுகிறது.

வெளிமாவட்டங்களிலிருந்து ஒரு டன் கரும்பை வெட்ட 800 கூலி பேசியும் கரும்பு வெடо்ட குறித்த நேரத்துக்கு ஆள்கள் வருவதில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர். குறிப்பிட்ட காலத்தில் வெட்டாததால், கரும்பின் எடை குறைந்து விவசாயிகள் இழப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகையால், இப்பகுதியில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு அறுவடை இயந்திரம் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து சுந்தம்பட்டியைச் சேர்ந்த விவசாயி ஆர். ராமசாமி கூறியது:

""குறிப்பிட்ட நேரத்தில் கரும்பை வெட்ட முடியாததால் இழப்பு ஏற்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலைக்காக சாகுபடி செய்யும் கரும்புகளை வெட்ட அறுவடை இயந்திரம் வழங்கப்படுகிறது.

அதேபோல, அரசுக்கு சொந்தமான ஆலைகளுக்காக சாகுபடி செய்யப்படும் கரும்புகளை வெட்டவும் கரும்பு அறுவடை இயந்திரம் வழங்க வேண்டும்'' என்றார் அவர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

First Published : 27 Oct 2010 01:18:12 PM IST

வேலூர், அக்.26: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகம் முன் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாலாற்றுக்கு நதிநீர் ஆணையம் அமைக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள பாலாறு உள்ளிட்ட 33 முக்கிய ஆற்றுப் படுகைகளில் மணல் எடுப்பதை தடை செய்ய வேண்டும்.

காவிரி-பாலாறு இணைப்பை நிறைவேற்ற வேண்டும். பாலாற்றில் தோல் கழிவுநீர், நகர கழிவுநீர், குப்பைகளை கொட்டுவதை தடை செய்ய வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.முல்லை தலைமை வகித்தார். தாலுகா செயலாளர் கே.ரகு, தமிழ்நாடு பசுமைப் பாதுகாப்பு மக்கள் இயக்கத் தலைவர் ஏ.சி.வெங்கடேசன், வேலூர் மாவட்ட பாலாறு பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஜமுனா தியாகராசன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

திருப்பத்தூரில்

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தாலுகா செயலாளர் டி.சங்கர் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு கே.கோவிந்தராஜி ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

வெண்ணம்பள்ளி ஏரியில் இருந்து தென்பெண்ணை ஆற்று கால்வாய் இணைப்பை பர்கூர் வழியாக திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள காக்கங்கரை, கந்திலி, செட்டேரிடேம், அக்ரஹாரம், நாட்டறம்பள்ளி ஏரிகளுக்கு வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சி.சாமிக்கண்ணு, மாவட்ட துணைத் தலைவர் எம்.நந்தி, தாலுகா தலைவர் சி.பொன்னுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் பயிரில் புகையான் பூச்சி தாக்குதல்**

First Published : 27 Oct 2010 01:04:29 PM IST

கிருஷ்ணகிரி,அக். 26: தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் பயிரிடப்பட்டுள்ள "ஆந்திரா பொன்னி' எனும் ரக நெல் பயிரில் புகையான் பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 27,500 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, சம்பா பருவத்தில் பையூர்-1, ஐ.ஆர்.-64, வெள்ளை பொன்னி மற்றும் வீரிய ஒட்டு ரகங்கள் உள்ளிட்டவை 18 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, தென்பெண்ணை ஆற்றுப்படுகையான காமராஜ் நகர், மலைசந்து, காவேரிபட்டணம், கிருஷ்ணகிரி அணை, பையூர், சப்பாணிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் "ஜலகர் பொன்னி'எனப்படும் ஆந்திரா பொன்னி எனும் நெல் ரகம் பயிரிடப்பட்டுள்ளது.

அதிக விளைச்சல், அரிசியின் சுவை, கூடுதல் லாபம் உள்ளிட்டவற்றால் இந்த ரகத்தை அதிக அளவில் பயிரிடுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்த ரக பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில், புகையான் பூச்சியின் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. நெல் பயிரின் பச்சையத்தை உறிஞ்சி, பயிரை பதராக்கிவிடும் தன்மை கொண்ட இவை மூன்றே நாள்களில்

பயிரை அழித்துவிடுமாம். இதனால், நஷ்டம் அடைந்து விடுவோம் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து வேளாண் துறை அலுவலர்கள் கூறியது:
"ஆந்திரா பொன்னி' ரகத்தைப் பயிரிட வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளோம். ஆனால், விவசாயிகள் கேட்கவில்லை. நோய் தாக்குதல் குறித்து தகவல்கள் கிடைத்தும், பயிரை பாதுகாப்பது குறித்து விவசாயிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதை கடைப்பிடித்தவர்கள் நல்ல பயன் பெற்றுள்ளனர் என்றனர்.

தினமலர்

**மஞ்சள் செடியில், கிழங்கு இல்லாததால் விவசாயிகள் கலக்கம்: வேரழுகல் நோயால் கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,03:33 IST

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில் மஞ்சள் பயிரில் இலைபுள்ளி நோய் மற்றும் வேரழுகல் நோய் தாக்கியதால், கிழங்கு அழுகி வெறும் செடி மட்டும் கையோடு வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் 200க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு செய்யப்பட்டு ஆறு மாதம் ஆன மஞ்சள் செடியை இலைபுள்ளி நோய் மற்றும் வேரழுகல் நோய் தாக்கியதால் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மஞ்சள் செடிகளின் இலையின் நுனி மஞ்சள் நிறமாகி, தொடர்ந்து இலை முழுவதும் மஞ்சளாகி விடுகிறது. அடுத்தபடியாக இலையின் தண்டு, நுனி குறுத்து மூலம் வேர் வரையில் நோய் பரவி, மஞ்சள் கிழங்கு முழுவதையும் தாக்கி விடுகிறது. நோய் தாக்கிய கிழங்கு வளர்ச்சி பாதிக்கப்பட்டு, பழுப்பு நிறமாக மாறி, நீர் கசிவு ஏற்பட்டு அழுகி விடுகிறது. அழுகிய கிழங்கில் புழுக்கள் தோன்றிய செடியை லேசாக தொட்டால் கையோடு வந்துவிடுகிறது. பல நாட்களாக பாரமரித்து வந்த மஞ்சள் செடியின் கிழங்கு அழுகி துர்நாற்றம் வீசுவதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், பயிர் பாதுகாப்பு உதவி பேராசிரியர் கீதா ஆகியோர் கூறியதாவது: இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த

மேன்கோசெப் 2 கிராம், பெவிஸ்டின் 2 கிராம் மற்றும் ஒட்டும் திரவம் ஒரு மில்லி என ஒரு லிட்டர் தண்ணிரில் கலந்து நோய் கண்டவுடன் தெளிக்கவேண்டும். நோய் தீவிரத்தை பொறுத்து இரண்டு அல்லது மூன்று முறை 10 அல்லது 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். வேரழுகல் நோய் மண்ணில் உள்ள ஒரு வகையான பூஞ்சாணத்தாலும், நோய் உள்ள கிழங்குகளை நடவு செய்வதாலும் பரவுகிறது. கிழங்கு அழுகல் நோயை தடுக்க விதைக்கு தேர்வு செய்த கிழங்கை காப்பர் ஆக்சி குளோரைடு அல்லது கார்பன்டசிம் ஆகியவை தண்ணீரில் கலந்து 30 நிமிடம் ஊறவைத்து நடவு செய்யவேண்டும். இதன்மூலம் கிழங்கு அழுகல் நோய் வருவதை ஆரம்பத்தில் கட்டுப்படுதலாம்.

நோய் தாக்குதல் அதிகம் இருக்கும் செடி கிழங்குகளை எடுத்து எரித்து விடவேண்டும். வயலில் நோய் தோன்றிய இடத்தில் காப்பர் ஆக்சி குளோரைடு ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 கிராம் கலந்து நோய் தாக்கிய செடியின் தூர்களை சுற்றியும் வேர்கள் நன்கு நனையும்படி ஊற்றி நோயை கட்டுப்படுத்தலாம், என்றனர்.

**காய்கறிகளுக்கு குறைந்தபட்ச விலை பா.ஜ., விவசாய அணி வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,02:34 IST

கோவை:"விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளுக்கு அரசே குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்,' என, பா.ஜ., விவசாய அணி வலியுறுத்தியுள்ளது.
கோவை, நீலகிரி உள்ளிட்ட ஐந்து மாவட்ட பா.ஜ., விவசாய அணி நிர்வாகிகள் கூட்டம், மாநில விவசாயிகள் அணித்தலைவர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. மாவட்ட பா.ஜ., தலைவர் நந்தகுமார் முன்னிலை வகித்தார், மாவட்ட விவசாய அணித்தலைவர் மாணிக்கம் வரவேற்றார்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:தமிழகத்தில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது போல, தடையற்ற மின்சாரத்தை விவசாயத்துக்கும் 24 மணி நேரமும் வழங்க வேண்டும். மத்திய அரசின் 100 நாள் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தை குஜராத் அரசு விவசாயத்துக்கு முழுமையாக பயன்படுத்துகிறது. இதனால், அந்த மாநிலம் விவசாயத்தில் முதன்மை மாநிலமாக மாறியுள்ளது.

தமிழகத்திலும் இத்திட்டத்தை முழுமையாக பயன்படுத்தி விவசாயத்தை பாதுகாக்க மத்திய,மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையின் முக்கிய நீர் ஆதாரமான நொய்யல் நதியை பாதுகாக்க தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நொய்யலை தூர்வாரி சீரமைக்க வேண்டும். நொய்யல் பாசன விவசாயிகள் சங்க தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில் காய்கறி மற்றும் பழங்களை இருப்பு வைக்க குளிர்பதன கிடங்குகளை அமைக்க வேண்டும்.

காய்கறிகளுக்கு அரசே குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்து, விலை வீழ்ச்சி ஏற்படும்போது கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். விமான நிலைய விரிவாக்கம் மற்றும் புறவழிச்சாலை ஆகியவற்றுக்கு கையகப்படுத்தும் நிலத்துக்கு, நில உரிமையாளர்கள் கேட்கும் இழப்பீட்டை கொடுத்த பிறகே கையகப்படுத்த வேண்டும்.இவ்வாறு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில், பா.ஜ., மாநில துணைத் தலைவர் சின்னராஜ், மாநிலச் செயலாளர் செல்வகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**ரூ.56 லட்சத்துக்குநிலக்கடலை ஏலம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,01:29 IST

அவிநாசி:சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்தில் ரூ.56 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, கடந்த வாரத்தை போலவே, 5,500 மூட்டை வரத்தாக இருந்தது.வரத்து ஒரே மாதிரியாக இருந்தாலும், அனைத்து ரகங்களின் விலை கடந்த வாரத்தை காட்டிலும், குவிண்டாலுக்கு ரூ.300 வரை குறைந்தது.இந்த வார ஏலத்தில், காய்ந்த நிலக்கடலை முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.3,200 முதல் ரூ.3,350 வரை, இரண்டாம் ரகம் ரூ.2,900 முதல் ரூ.3,150 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,250 முதல் ரூ.2,720 வரை, பச்சை ரகம் ரூ.1,500 முதல் ரூ.1,850 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது.வரும் வாரங்களில் விலை அதிகரிக்க வாய்ப் புள்ளது. இந்த வாரம் 762 விவசாயிகள், 35 வியாபாரிகள் பங்கேற்றனர்; ரூ.56 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

**சிறு, குறு உற்பத்தியாளர்களுக்கு வங்கி கடன்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,01:36 IST

திருப்பூர்:"சர்பாசி சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த ரிசர்வ் வங்கி நிதியுதவி செய்ய வேண்டும்' என, "ஆர்பிட்ரேஷன் கவுன்சில்' வலியுறுத்தியுள்ளது.திருப்பூர் "ஆர்பிட்ரேஷன் கவுன்சில்' சங்கத்தின் 14வது பொதுக்குழு கூட்டம், "சைமா' அலுவலகத்தில் நடந்தது. சங்க துணை தலைவர் சுப்ரமணியம் தலைமை வகித்தார். செயலாளர் மந்தராசலம் ஆண்டறிக்கை வாசித்தார்.அப்போது,"கடந்த 2009-10ம் நிதியாண்டில், தொழில் சம்பந்தமான 64 தொழில் வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

டையிங், நிட்டிங், பிரின்டிங், "ஜாப் ஒர்க்' நிறுவனங்களின் வரவு, செலவு பிரச்னைகள் தீர்க்கப்பட்டன; ஏற்றுமதியாளர்களுக்கு வர வேண்டிய நிலுவை தொகைகள் பெற்றுத்தரப்பட்டன.கடந்தாண்டில் 64 வழக்குகள் தொடர்பாக, நான்கு கோடியே மூன்று லட்சத்து 30 ஆயிரத்து 412 ரூபாய் அளவிலான பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது,' என்றார்.

தொழில் பிரச்னைகளை சுமூகமாக தீர்த்துக்கொள்ளும் வகையில், ஆர்பிட்ரேஷன் கவுன்சிலை சிறப்பாக நடத்தவும், உறுப்பினர்கள் மத்தியில் ஆர்பிட்ரேஷன் கவுன்சிலின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் ஆலோசனை வழங்கப்பட்டது.தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள், வங்கி தவணைகளையும், வட்டிகளையும் சரிவர செலுத்த முடிவதில்லை. இதனால், சிறு, குறு ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் சர்பாசி சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களின் பொருளாதாரம் மேம்படும் வகையில், தொழிலை தொடர்ந்து நடத்த வங்கிக்கடன் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, மத்திய ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய நிதி அமைச்சகத்திடம் கவுன்சில் சார்பில் கோரிக்கை வைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அதுதொடர்பான தொழில்துறையினரின் எதிர்பார்ப்புகளை தெரிந்துகொள்ள வசதியாக, விரைவில் ஆலோசனை கூட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க செயலாளர் கார்த்திகேயன், "நிட்மா' தலைவர் ரத்தினசாமி, "சிம்கா' தலைவர் நடராஜன் மற்றும் விவேகானந்தன், "டெக்பா' சார்பில் பொது செயலாளர் அசோகன், "டெக்மா' சார்பில் சாமிநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## பருப்பு விலை குறைந்தது; முட்டைக்கு தட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,01:33 IST

திருப்பூர்:புரட்டாசி முடிந்து விட்டதால், முட்டை விற்பனை 10 முதல் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. விற்பனை சூடுபிடித்துள்ளதால், அனைத்து பகுதிக்கும் தேவை அதிகரித்துள்ளது. வியாபாரிகள் ஆர்டர் செய்த அளவுக்கு முட்டை கிடைப்பதில்லை. மளிகைவர்த்தகத்தில், பருப்பு வகைகளின் விலை குறைந்துள்ளது.மார்க்கெட் நிலவரம்:திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""வரும் நாட்களில் புதிய பருப்பு வரத்து இருக்கும். அதற்குள் இருப்பு வைக்கப்பட்டுள்ள பருப்பு வகை விற்பனை செய்யப்படும். பழைய பருப்பு அதிகளவில் விற்பனைக்கு வருகிறது.
அனைத்து பருப்பு வகைகளும் விலை குறைந்துள்ளன. துவரம் பருப்பு கிலோவுக்கு மூன்று ரூபாய்; பாசிப்பருப்பு, பாசிப்பயறு, உருட்டு உளுந்து, கருப்பு உளுந்து கிலோவுக்கு நான்கு ரூபாய் வரை குறைந்துள்ளது.

வரும் நாட்களில் வரத்தை பொறுத்து, விலையில் ஏற்றம் இறக்கம் இருக்கும்.தீபாவளி பண்டிகைக்கு அதிகளவில் இனிப்பு தயார் செய்யப்படும் என்பதால், அஸ்கா விலை அதிகரித்துள்ளது. கிலோவுக்கு 50 காசு உயர்ந்து, 29.50 ரூபாய் என விற்கிறது. துவரம் பருப்பு கிலோ 55 ரூபாய்; பாசிப்பருப்பு 62; பாசிப்பயறு 52; உருட்டு உளுந்து 78; கருப்பு உளுந்து 62; கொள்ளு 22; தட்டைப்பயறு 32; சுண்டல் கடலை 36 ரூபாய் விற்பனை செய்யப்படுகிறது," என்றார்.முட்டை தட்டுப்பாடு: புரட்டாசி முடிந்து விட்டதால், முட்டை விற்பனை 10 முதல் 20

சதவீதம் அதிகரித்துள்ளது. விற்பனை சூடுபிடித்துள்ளதால், அனைத்து பகுதிக்கும் தேவை கூடுதலாக உள்ளது. வியாபாரிகள் ஆர்டர் செய்த அளவுக்கு முட்டை கிடைப்பதில்லை. 10 ஆயிரம் முட்டை வாங்கும் வியாபாரிக்கு 8,000 முதல் 9,000 முட்டைகளே கிடைக்கின்றன.

தீபாவளி வரை இதே நிலை தொடரும். கடந்த ஒரு வாரத்தில் முட்டைக்கு ஏழு காசு விலை உயர்ந்துள்ளது. கொள்முதல் விலையில் 2.57 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.62; சில்லரை விற்பனையில் 3.00 ரூபாய்க்கு விற்கிறது. வரும் நாட்களில் தொடர்ந்து விலை உயரும் வாய்ப்புள்ளது.கடலை எண்ணெய் விலை உயராது: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்கத்தலைவர் சந்திரன் கூறுகையில், ""கடலை வரத்து உள்ளதால், கடலை எண்ணெய் விலை உயரும் வாய்ப்பு குறைவு. சமையல் ஆயில் விலையில் மாற்றம் ஏற்படவில்லை.வரும் ஞாயிறு முதல் தீபாவளி விற்பனை துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு கிலோ கடலை எண்ணெய் 94 ரூபாய்; விளக்கெண்ணெய் 95; ரீபன்ட் ஆயில் 105; தேங்காய்எண்ணெய் 82; பாமாயில் 50; நெய் கிலோ 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

**தக்க தருணத்தில் மழைவிவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,01:27 IST

திருப்பூர்:தக்க தருணத்தில் மழை பெய்து, வாடிக்கொண்டிருந்த பயிர்கள் காக்கப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.திருப்பூரில் நேற்றும், முன்தினமும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. நகரில் 28.6 மி.மீ., மழை பதிவானது. சோளம், மக்காச்சோளம் மற்றும் கத்தரி, தக்காளி உள்ளிட்ட காய்கறி பயிர்களை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர்.கடந்தாண்டுகளை விட, குறைவான மழைப்பொழிவு கிடைத்ததால், பயிர்கள் அனைத்தும் வாடின.

தேவையான நீர் பாசனம் அளிப்பதற்கும் வழியின்றி இருந்தது. தற்போது கிடைத்துள்ள மழை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.விவசாயிகள் கூறுகையில், "கடந்தாண்டுகளை விட, குறைவான மழை கிடைத்ததும், வெயில் அதிகளவில் இருந்ததும் நிலத்தடி நீர் மட்டத்தை வெகுவாக பாதித்தது.கடந்த மாதம் மற்றும் இம்மாதத்தின் துவக்கத்தில் பெய்த மழையை கொண்டு பயிரிடப்பட்டது; அடுத்தகட்ட மழையின்றி பயிர்கள் வாடின. தற்போது பெய்துள்ள மழை, பயிர்களை வறட்சியில் இருந்து காப்பாற்றியுள்ளது,' என்றனர்.

**விவசாயிகள் பட்டறிவு பயணம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,00:17 IST

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் கோட்டைக்கரையாறு பாசனப் பகுதியில் நீர்வள நிலவள திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இதில் வேளாண்மை துறையின் மூலம் ராஜராஜன் 1000 முறையில் நெல் சாகுபடி செய்திட, ஆனந்தூர் பகுதியில் 20 எக்டரில் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.நெல் நடவு இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதை விவசாயிகள் ஆர்வமாக பார்த்து வருகின்றனர். ராஜராஜன் 1000 முறையில் நெல் நடவு செய்வதை அறிந்திட, சனவேலி மற்றும் சுற்று வட்டார கிராம விவசாயிகளை பட்டறிவு பயணம் மூலம் அழைத்துச் சென்று செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் முகமது அப்துல் நசீர் , விளக்கினார். ஏற்பாட்டினை வேளாண்மை துணை அலுவலர் தனதுரை,உதவி அலுவலர் சண்முகவேல் செய்திருந்தனர்.முன்னோடி விவசாயிகளான வீரமணி, மைக்கேல், ராஜகோபால், சிவசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வாரச்சந்தையில் காய்கறி விற்பனை மந்தம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,00:06 IST

சிவகங்கை: சிவகங்கை வாரச்சந்தையில் அதிக வரத்து இருந்தும்,  காய்கறி விலை குறைவில்லை. இதனால் விற்பனை மந்தமாக இருந்தது. நேற்றைய விலை நிலவரம் (கிலோ): கத்தரிக்காய்- 20; வெண்டைக்காய் -20; பாகற்காய்- 20; முருங்கை பீன்ஸ்- 30; கேரட் -16; முள்ளங்கி- 16; உருளை கிழங்கு- 20; முட்டை கோஸ்- 15; தக்காளி-10; கருணை கிழங்கு- 30; இஞ்சி- 30; 40 க்கு விற்ற அவரைக்காய்- 30; பட்டர் பீன்ஸ்- 60; வெங்காயம்- 20, பெல்லாரி - 20; 24 க்கு விற்ற காலி பிளவர்- 20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; பச்சை மிளகாய்- 16; பீட்ரூட்- 15; 20 க்கு விற்ற நூக்கல் -30; சோயா பீன்ஸ்- 40; எலுமிச்சை- 25; பீர்க்கை- 20; டர்னிப் -30; சீனி அவரை- 10; 20க்கு விற்ற சவ்சவ்- 18; 30 க்கு விற்ற மல்லித்தழை- 20 ரூபாய். பழங்கள்: ஆப்பிள்- 80, அதில் இரண்டாவது ரகம்- 60; ஆரஞ்சு- 50; திராட்சை - 40; அன்னாசி பழம்- 20; மாதுளை- 60, அதில் இரண்டாவது ரகம்- 40; சீத்தா பழம்- 40; கொய்யா- 30 ரூபாய். காய்கறி வரத்து இருந்தும், வியாபாரிகள் விலையை குறைக்காததால், விற்பனை களைகட்டவில்லை.

**துல்லிய பண்ணையில் பச்சை மிளகாய்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,22:54 IST

எஸ்.புதூர்: எஸ்.புதூர் கொண்டபாளையத்தில், வீரிய பச்சை மிளகாய் கன்றுகள் வழங்கப்படுகின்றன. சமுதாய நாற்றங்காலில் தசரா, இந்திரா, பிரியங்கா வீரிய ஒட்டு ரகங்கள் தயார் நிலையில் உள்ளன. இதில், 97 கன்றுகள் கொண்ட ஒரு தொகுப்பு 50 ரூபாய். ஒரு ஏக்கருக்கு 6,000 கன்றுகள் தேவைப்படும். பாசன வசதியுள்ள விவசாயிகள் பயிரிட்டால்,

ஏக்கருக்கு 40 டன் மகசூல் கிடைக்கும். விவசாயிகள் பெற்று கொள்ளலாம், என தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜமூர்த்தி தெரிவித்தார்.

**மழையின்றி கருகும் மானாவாரி நெற்பயிர்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,23:51 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை பகுதிகளில் பருவ மழையை நம்பி மானாவாரியாக பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பரங்கிப்பேட்டையை சுற்றியுள்ள புதுச்சத்திரம், வில்லியநல்லூர், அரியகோஷ்டி, அகரம், சின்னகுமட்டி, பெரியகுமட்டி உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் மணல் பாங் கான இடமாக உள்ளது. இங்குள்ள புஞ்சை நிலங்களில் பருவ மழையை நம்பி அதற்கு தகுந்தாற்போல் உரிய காலத்தில் நெல் மானாவாரி பயிர் செய்வது வழக்கம். பருவ மழை பொய்க்கும் பட்சத் தில் வயலில் ஒரு ஓரத்தில் குளம் வெட்டி அதில் இருந்து தண் ணீரை குடங்கள் மூலமாக பிடித்து தெளித் தும், இன்ஜின் வைத்து குழாய் மூலமாகவும் பாய்ச்சி வந்தனர். இதனால் நஞ்சை நிலங்களைவிட புஞ்சை நிலங்களில் பயிர் செய்த விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது.

தற்போது அத்தியாநல்லூர், கொத்தட்டை, வேளங்கிப்பட்டு, புதுச்சத்திரம் உட்பட 10க்கும் மேற் பட்ட கிராமங்களில் 700 ஏக்கர் நெல் பயிர் விவசாயம் செய்துள்ளனர். ஓரளவிற்கு வளர்ந்து விட்ட நிலையில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் பெய்யும் பருவ மழை இதுவரை பெய்யாமல் உள்ளதாலும் சுட்டெரிக்கும் வெயிலாலும் நெற்ப்பயிர்கள் கருகி வருகிறது. சுனாமிக்கு பிறகு பரங்கிப் பேட்டை பகுதிகளில் நிலத்தடிநீர் மட்டம் குறைந்துள்ளதால் புஞ்சை நிலங்களில் உள்ள குளத்தில் கூட போதுமான அளவில் தண்ணீர் சுரப்பு இல்லாமல் உள்ளது. இதனால் கருகும் மானாவாரி நெல் பயிர்களை ஓரளவு காப்பாற்ற போர்வெல் போட்டு இன்ஜின் மூலம் தண்ணீர் இறைத்து வருகின்றனர். இருந்தும் அந்த தண்ணீர் மணல் பாங்கான அந்த இடத் திற்கு போதாமல் பயிர் கள் கருகி வருகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

அரியகோஷ்டி விவசாயி செல் வமணி கூறுகையில், "பருவ நிலைக்கேற்ப மானாவாரி பயிர் கள் சாகுபடி செய்து வந்தோம். தற்போது ஐப்பசி மாதத்தில் கூட இன்னும் போதுமான மழை பெய் யவில்லை. பெரும்பாலான கிராமங்களில் உள்ள கூலித் தொழிலா ளர்கள் கட்டட வேலைக்கு செல்வதால் ஆள் பற்றாக்குறை காரணமாக நெற்பயிருக்கு தண் ணீர் இறைக்க முடியாத நிலை உள்ளது. இதனால் 100 ஏக்கர் வரை நெற்பயிர்கள் கருகி விட்டன' என்றார்.

**மானிய விலையில் மரக்கன்றுகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,23:48 IST

பண்ருட்டி : தற்போது மழைக் காலம் துவங்குவதால் மா, முந்திரி, பலா ஒட்டு கன்றுகள் நட்டு விவசாயிகள் பயன்பெற பண்ருட்டி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் ராமலிங்கம் கேட்டுக் கொண் டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: நெய்வேலி வட்டம் 4ல் அமைந்துள்ள அரசு தோட் டக்கலை பண்ணையில் மா, முந்திரி ஒட்டு ரக கன் றுகள், பலா, கொய்யா, புளியன், இலவன், மூங் கீல் கன்றுகள் தேவையான அளவிற்கு இருப் பில் உள்ளன. மா கன்று 30 ரூபாய், பலா 25, முந்திரி 18,கொய்யா 12, புளியன் 10, இலவன் 5, மூங்கில் 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அரை ஏக்கர் பரப்பளவிற்கு மேல் பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் மரக்கன்றுகள் விற்கப்படுகிறது. தற் போது மழைக்காலம் துவங்குவதால் தேவைப் படும் விவசாயிகள் கன்றுகள் வாங்கி பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***உற்பத்தி நன்றாக உள்ள நிலையிலும் ஏற்றுமதி அதிகரித்து வருவதால் தேங்காய் விலை 2 மடங்கு உயர்வு***



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

நம் நாட்டில், தேங்காய் உற்பத்தி ஓரளவிற்கு நன்றாக உள்ளது. இந்நிலையில், வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதால் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரித்துள்ளது. தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளை முன்னிட்டு உள்நாட்டிலும் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, ரூ.5–ஆக இருந்த ஒரு தேங்காயின் விலை தற்போது இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.10–க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

ஏற்றுமதி

வெளிநாடுகளில் இந்திய தேங்காய்க்கு மிகவும் அதிக விலை கிடைக்கிறது. நடப்பு ஆண்டில் இதுவரையிலான காலத்தில், நாட்டின் தேங்காய் ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 145 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியாவில், தேங்காய் விற்பனையில் முதலிடத்தில் உள்ள தமிழ்நாடு, உள்நாட்டு தேவைப்பாட்டை நிறைவு செய்வதுடன், பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் நேபாளம் உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது.

பாமாயிலுடன் ஒப்பிடும்போது, தேங்காய் எண்ணெய் விலை தற்போது குறைவாக உள்ளது. எனவே, உணவு பொருள்கள் மற்றும் சோப்புகள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள், தேங்காய் எண்ணெயை அதிக அளவில் கொள்முதல் செய்து வருகின்றன என்று தேங்காய் எண்ணெய் விற்பனையில் ஈடுபட்டு வரும் முன்னணி நிறுவனத்தைச் சேர்ந்த தலத் மஹ்மூது தெரிவித்தார்.

கேரளா

நடப்பு பருவத்தில், தேங்காய் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் கேரளாவில், உற்பத்தி 10–15 சதவீதம் குறையும் என வர்த்தக பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். எனவே, தேங்காய் எண்ணெய் விலையும் உயர வாய்ப்புள்ளது.

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருள்கள் ஏற்றுமதி 34 சதவீதம் உயர்ந்துள்ளது என தேங்காய் மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

ரூ.442 கோடி

நம் நாட்டிலிருந்து, தேங்காய், தேங்காய் எண்ணெய், புண்ணாக்கு, கொப்பரை, தேங்காய் ஓடு, நார் போன்ற பல்வேறு பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. சென்ற நிதி ஆண்டில் இவை 1.13 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.442 கோடியாகும்.

முந்தைய 2008–09–ஆம் நிதி ஆண்டில் தேங்காய் சார்ந்த பொருள்களின் ஏற்றுமதி சுமார் 87,000 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு ரூ.329 கோடியாகும். ஆக, இத்துறையில் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 30 சதவீதமும், ரூபாய் மதிப்பின்

அடிப்படையில் 34 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.

தேங்காய் உற்பத்தியில் இலங்கை முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது. அந்நாட்டின் தேங்காய் மற்றும் அது சார்ந்த பொருள்கள் சற்று தரம் குன்றியதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் இந்திய தேங்காய் பொருள்களுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளது.

குறிப்பாக வளைகுடா நாடுகள், பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இந்திய தேங்காய் பொருள்களை உடனடியாக சந்தைப்படுத்த முடிகிறது. தேங்காய் பொருள்களின் ஏற்றுமதி உயர்ந்துள்ளதற்கு இதுவே முக்கிய காரணமாகும். நம் நாட்டிலிருந்து தேங்காய் சார்ந்த பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் எண்ணிக்கை, கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், 54 ஆக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் 81 ஆக உயர்ந்துள்ளது.

தேங்காய் பொருள்களின் மொத்த ஏற்றுமதியில், ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் 33 சதவீதம் சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து வருவதும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது என தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உற்பத்தி

கடந்த 2004–05–ஆம் நிதி ஆண்டில் உள்நாட்டில் 1,283 கோடி தேங்காய்கள் உற்பத்தி ஆகியுள்ளன. இது, 2007–08–ஆம் நிதி ஆண்டில் 1,474–ஆக உயர்ந்தது. இதே காலத்தில், நாடு தழுவிய அளவில் ஒரு ஹெக்டேர் தென்னந்தோப்பிலிருந்து பெறப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை 6,632–லிருந்து 7,747–ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் வகையில் தேங்காய் மேம்பாட்டு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக, தேங்காய் தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டன. தற்போது நம் நாட்டில் ஏழு மாநிலங்களில் 574 மையங்கள் உள்ளன. இதன் வாயிலாக 80,000 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். கேரளாவில் மட்டும் 332 மையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற காரணங்களால், கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், தேங்காய் உற்பத்தி வியக்கத்தக்க வகையில் 1,572.90 கோடியாக அதிகரித்துள்ளது. முந்தைய 2007–08–ஆம் நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போது, உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் ஒரு ஹெக்டேரிலிருந்து பெறப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை, அதற்கு முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 7 சதவீதம் உயர்ந்து வரலாறு காணாத வகையில் 8,303–ஆக அதிகரித்துள்ளது. புதிதாக தென்னங்கன்றுகள் நடும் பரப்பளவு குறைந்துள்ள நிலையிலும், மகசூல் அதிகரித்ததால், கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் தேங்காய் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் தேங்காய் உற்பத்தி வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தென்னந் தோப்புகளில் 60 சதவீதம் நல்ல நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் அமைந்துள்ளன. இதனையடுத்து, தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேரிலிருந்து பெறப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. இந்த வகையில், தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.

## இறக்குமதி குறைந்துள்ளதால் ஏலக்காய் விலை உயர வாய்ப்பு



ஏலக்காய் உற்பத்தியில் சர்வதேச அளவில் முதலிடத்தில் உள்ள கவுதமாலாவிலிருந்து நம் நாடு இறக்குமதி செய்யும் ஏலக்காயின் அளவு குறைந்து வருகிறது. இதனையடுத்து, நம் நாட்டில் ஏலக்காய் விலை உயர வாய்ப்புள்ளது.

கடந்த 2004 மற்றும் 2005–ஆம் ஆண்டுகளில் கவுதமாலாவில் ஏலக்காய் உற்பத்தி 30,000 டன்னாக மிகவும் அதிகரித்து இருந்தது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டில் 16,500 டன்னாக சரிவடைந்தது. இது, நடப்பு ஆண்டில் 20,000 டன்னாக இருக்கும் என நறுமண பொருள்கள் வாரியம் தெரிவித்துள்ளது.

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், நம் நாடு, கவுதமாலாவிலிருந்து 180 டன் ஏலக்காய் இறக்குமதி செய்தது. இது, சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் 95 டன்னாக குறைந்தது. இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இறக்குமதி 45 டன்னாக சரிவடைந்துள்ளது.

கவுதமாலாவில் ஏலக்காய் விளையும் பகுதிகளில் கடும் மழை பெய்து வெள்ளச் சேதம் ஏற்பட்டுள்ளதால், சர்வதேச அளவிலும் ஏலக்காய் விலை உயர்ந்து வருகிறது.

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டிலிருந்து வரலாறு காணாத வகையில் ரூ.165.70 கோடி மதிப்பிற்கு ஏலக்காய் ஏற்றுமதியாகி உள்ளது. அளவின் அடிப்படையில் இது 1,975 டன்னாக இருந்தது.

## அதிக வரத்து எதிரொலி: கோவையில், துவரம் பருப்பு விலை வீழ்ச்சி

கோவை, அக்.28–

அதிக வரத்து காரணமாக கோவை மார்க்கெட்டில் விற்பனையாகும் துவரம் பருப்பு மற்றும் உளுந்து பருப்பின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

துவரம் பருப்பு

பெண்கள் சமையலில் சாம்பார், ரசம், துவையல் போன்றவை செய்வதற்காக துவரம் பருப்பை அதிக அளவில் உபயோகிப்பார்கள். இதே போல் இட்லி, தோசை மாவுக்காக உளுந்தை அதிக அளவில் உபயோகம் செய்வார்கள். கடந்த சில மாதங்களாக இந்த பருப்பு ரகங்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. குறிப்பாக துவரம் பருப்பு கடந்த ஆண்டில் ஒரு கிலோ ரூ.100 வரை விற்பனையானது. இந்த விலை ஏற்றம் காரணமாக ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மராட்டியம், குஜராத், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பருவ மழை சரியான நேரத்தில் பெய்ததால் துவரம் பருப்பு மற்றும் உளுந்தின் விளைச்சல் அதிகரித்தது. இதன் காரணமாக ரூ.100க்கு விற்பனையான துவரம் பருப்பின் விலை படிப்படியாக குறைந்து ரூ.80 வரை விற்றது. இந்த நிலையில் வருகிற நவம்பர் மாத கடைசி மற்றும் டிசம்பர் மாத தொடக்கத்தில் புதிதாக விளையும் துவரம் பருப்பு சந்தைக்கு வரத் தொடங்கும். இதன் காரணமாக தற்போது ரூ.5,300–க்கு விற்பனையான 100 கிலோ கொண்ட மூடை துவரம் பருப்பு ரூ.300 குறைந்து ரூ.5 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது.

இந்த நிலையில் கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் விற்பனையான உளுந்து மற்றும் துவரம் பருப்பின் விலை விவரம் வருமாறு:–

வரத்து அதிகரிப்பு

கடந்த வாரம் 100 கிலோ கொண்ட துவரம்பருப்பு மூடை ரூ.5,300–க்கு விற்றது, தற்போது ரூ.300 குறைந்து ரூ.5 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது. சில்லரை விலையில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.52–க்கும், மொத்த விலையில் ஒரு கிலோ ரூ.50–க்கும் விற்பனை ஆகிறது. இதே போல் உளுந்து பருப்பின் விலையும் குறைந்து உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் ரூ.6,400–க்கு விற்ற 100 கிலோ உளுந்து மூடை தற்போது ரூ.300 குறைந்து ரூ.6,100 விற்பனையாகிறது. இதை தவிர மளிகை மார்க்கெட்டில் விற்பனை ஆகும் மற்ற பருப்பு ரகங்களை பொறுத்தவரை விலையில் எந்த மாற்றமும் இல்லை.

இந்த ஆண்டு மராட்டியம், குஜராத் மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் துவரம் பருப்பு மற்றும் உளுந்து பருப்பின் விளைச்சல் அதிகரித்துள்ளது. மேலும் வருகிற நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் புதிய பருப்பு வரத் தொடங்கும்.

இதன் காரணமாக இருப்பு வைக்கப்பட்டு உள்ள உளுந்து மற்றும் துவரம் பருப்பு ஆகியவை சந்தைக்கு வரத் தொடங்கி உள்ளன. இதனால் அதன் விலைகள் குறைந்து

உள்ளது என்று கோவை தியாகி குமரன் மார்க்கெட் மளிகை சங்க நிர்வாகி கணேசன் தெரிவித்தார்.

## நெம்பாலக்கோட்டை கோவிலில் பாரம்பரிய முறையில் ஆதிவாசி மக்கள் கொண்டாடிய நெற்கதிர் அறுவடை திருவிழா



பாரம்பரியமாக கொண்டாடும் அறுவடை திருவிழாவையொட்டி கூடலூர் புத்தூர்வயலில் ஆதிவாசி மக்கள் விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்த காட்சி.

கூடலூர், அக்.28–

கூடலூர் நெம்பாலக் கோட்டை வேட்டைக் கொருமகன் கோவி லில் பாரம்பரிய முறையில் ஆதிவாசி மக்கள் நெற்கதிர் அறுவடை திருவிழா கொண்டாடினர்.

அர்ஜூனனின் தவம்

சிவபெருமானிடம் வரம் கேட்பதற்காக அர்ஜூனன் கூடலூர் நெம்பாலக் கோட்டையில் கடும் தவம் செய்கிறார். அவரை சோதிப் பதற்காக சிவபெருமான் வேடனாக பூண்டு அர்ஜூனன் அருகே அம்பு எய்கிறார். பின்னர் அர்ஜூனனுக்கு சிவபெருமான் காட்சி அளிக்கும் இடமே அம்பு மலை எனவும் நாளடைவில் நெம்பாலக்கோட்டை என அழைக்கப்படுவதாக புராண வரலாறு கூறுகிறது.

வேடனாக சிவபெருமான் காட்சி அளித்த இடத்தில் வேட்டைக்கொருமகன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆதிவாசி, பனியர், மவுண்டாடன் செட்டி சமுதாயத்தினர் வழிபட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் ஆதிவாசி மக்கள், மவுண்டாடன் செட்டி இனத்தவர்கள் பாரம்பரியமாக நெற்கதிர் அறுவடை திருவிழா கொண்டாடுவது வழக்கம்.

நெற்கதிர் அறுவடை திருவிழா

இதற்காக ஆடி மாதம் நெற்கதிர்கள் நடப்பட்டு கூடலூர் பகுதியில் நெல் விவசாயம் களைகட்டுவது வாடிக்கை. 3 மாத பராமரிப் பிற்கு பிறகு ஐப்பசி மாதம் நெற்கதிர்கள் விளைந்து அறு வடைக்கு தயாராகி விடும். விளைவித்த பயிரை கடவு ளுக்கு படைக்கும் பாரம் பரிய நெற்கதிர் அறுவடை திருவிழா நேற்று காலை புத்தூர்வயலில் நடந்தது. ஆதிவாசி மக்கள், மவுண்டாடன் செட்டி சமுதா யத்தினர் கூடலூர் புத்தூர் வயலில் ஏக்கர் கணக்கில் பயிரிடப் பட்டுள்ள நெற்கதிர் களை பூஜை செய்து வழிபட் டனர்.

பின்னர் நெற்கதிர்களை அறுவடை செய்து சிறிய கட்டுகளாக கட்டி மேளதாளம் முழங்க ஊர்வலமாக எடுத்து புத்தூர்வயல் விஷ்ணு கோவி லிலும், மங்குழி பகவதி அம்மன் கோவில் மற்றும் கூடலூர் நெம்பாலக் கோட்டை ஆகிய கோவில் களில் நெற்கதிர்களை வைத்து பூஜித்தனர். முன்னதாக ஆதி வாசி மக்கள், மவுண்டாடன் சமுதாயத்தினர் ஊர்வலமாக நெற்கதிர்களை எடுத்து வந்து நெம்பாலக் கோட்டை கோவிலில் வைத்து வழிபட்டனர்.

இதில் நூற்றுக்கணக்கான ஆதிவாசி மக்கள் உள்பட அனைத்து தர மக்களும் கலந்து கொண்டனர். முன்ன தாக புத்திரி திருவிழா என அழைக்கப்படும் அறு வடை திருவிழாவையொட்டி நெம் பாலக்கோட்டை வேட்டைக் கொருமகன் கோவில் காலை 6 மணிக்கு மகா கணபதி ஹோமமும், 7 மணிக்கு கொடி ஏற்றி அபிஷேக ஆராதனை களும், 9 மணிக்கு அம்மன் அருள்வாக்கும் நடை பெற்றது.

சிவன் மலையில் விசேஷ பூஜை

பின்னர் 12 மணிக்கு நெற்கதிர்கள் வைத்து சிறப்பு பூஜை நடைபெற்றது. பின்னர் அனைத்து பக்தர்களுக்கு நெற்கதிர் பிரசாதம் வழங்கப் பட்டது.

மாலை 5 மணிக்கு சிவன் மலையில் விசேஷ பூஜைகளும், மகா தீபாராதனைகளும் நடை பெற்றது. பின்னர் குறிஞ்சி இலக்கிய மன்றத்தின் சார்பில் பஜனை யும், இரவு 8 மணிக்கு அத்தாழ பூஜையும் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை மற்றும் நெம்பாலக்கோட்டை பகுதி மக்கள் செய்து இருந்தனர்.

# வேளாண்மை செய்திகள்

### ஒரு ஏக்கர் நிலத்தில்

## மண்புழு உரத்தை பயன்படுத்தி வாழை சாகுபடி



சொட்டுநீர் பாசனம் மூலம் 5 ஏக்கர் நிலத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார் குனியமுத்தூர் விவசாயி பழனிச்சாமி. தற்போது அவரது தோட்டத்தில் 1 ஏக்கர் பரப்பில் மண் புழு உரத்தை பயன்படுத்தி நேந்திரன் வாழை சாகுபடி செய்து உள்ளார்.

இது குறித்து விவசாயி பழனிசாமி கூறியதாவது:-

**மண் புழு உரம்**

நேந்திரன் வாழை நடுவதற்காக தோட்டத்தில் உள்ள இலை, தலை, களை எடுத்த புல், தென்னை ஓலை, வீணாகும் காய்கறி ஆகியவைகளை கொண்டு மண்புழு உரம் தயாரித்தேன். இதற்கான 6 பாத்திகள் அமைத்தேன். இந்த ஆறு பாத்தியில் தோட்டத்தில் உள்ள செடி மற்றும் மரங்களில் காய்ந்து வீணாக கிடக்கும் இலை, தலை, களை எடுத்த புல், தென்னை ஓலை ஆகியவைகளை இந்த தொட்டியில் இட்டு ஒன்றாக கலக்கி வைத்தேன். அதில் மண்புழுகளை வாங்கி வளர்த்தேன். இந்த மண்புழுக்கள் இலை, தலைகளை நன்கு சாப்பிட்டு அவை வெளியிட்ட எச்சம் நன்கு உரமாக (டீத்தூள் போல்) மாறி இருந்தது.

**3 முறை உழவு**

இந்த வாழை பயிரிடுவதற்காக முதலில் 1 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்தேன். முதலில் சட்டி கலப்பை கொண்டு 3 முறை உழவு செய்தேன். அதை தொடர்ந்து மண் பொல பொல தன்மை அடைவதற்காக 5 கலப்பை கொண்டு நிலத்தை உழவு செய்தேன்.

அதன் பின்னர் வாழை கன்றுகள் நடுவதற்கு தேவையான குழிகளை அமைத்தேன். இதற்காக 2 அடிக்கு 2 அடி நீள அகலம் உள்ள குழு தோண்டி அந்த குழியில் பியூரிட்டான் குருணை 5 கிராம் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 10 கிராம் என்ற அளவில் ஒவ்வொரு குழிக்கும் வைத்தேன். அதன் பிறகு நீர் பாய்ச்சினேன்.

**இலை கருகல் நோய்**

3 மாதம் கழித்து தொட்டியில் வைக்கப்பட்டு இருந்த மண்புழு உரத்தை எடுத்து ஒவ்வொரு குழியிலும் இட்டு நீர் பாய்ச்சினேன். மேலும் நிலத்தில் ஈரப்பதம் குறையாமல் இருக்க அவ்வப்போது நீர் பாய்ச்சினேன். மண் புழு உரம் இட்டதால் வாழை மரம் நன்கு செழித்து வளர்ந்தது. அதன் பின்னர் 20 நாட்கள் இடைவெளியில் கன்றுகளைச் சுற்றி அடியுரமாக மண் புழு உரம் இட்டேன். அதன் பிறகு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சினேன்.

5 மாத முடிவில் 2 தடவை குழிகளை சுற்றி உள்ள களைகளை எடுத்தேன். அதன் பின்னர் 7 மாதம் வரை வாரம் 2 தடவை நீர் பாய்ச்சினேன். நன்கு வளர்ந்து இருந்த வாழை மரத்தில் குருத்தில் வண்டு மற்றும் பூச்சி நோய் தாக்காமல் இருக்க குருத்தில் உள்ள பட்டையின் உள்புறமாக ஒவ்வொரு வாழை கன்றுக்கும் பியூரிட்டான் மருந்தை 2 கிராம் என்ற அளவில் வைத்தேன். மேலும் இலைக்கருகல் நோய் தாக்குதல் இல்லாத வகையில் டில்ட் என்ற மருந்தை ஸ்பிரே மூலம் தெளித்தேன்.

**காய்கள் நன்கு திரண்டு....**

அதன் பின்னர் மீண்டும் ஒரு முறை களை எடுத்தேன். களை எடுத்த பின்னர் காய் சீராக வருவதற்காக மீண்டும் மண் புழு உரம் இட்டேன். அப்போது காய்கள் நன்கு திரண்டு நீட்சி தன்மையுடன் காணப்பட்டது. 7வது மாதத்தில் வாழை குலை தள்ளியது. குலை தள்ளியதில் இருந்து 90 நாட்கள் காய் அறுவடைக்கு வருவதற்காக மீண்டும் மண் புழு உரம் இட்டேன். இதன் மூலம் ஒரு குலையில் 15 கிலோ முதல் 17 கிலோ வரை காய் கிடைத்தது. ரசாயன உரங்களை வைத்து பயிர் செய்த வாழையை விட மண் புழு உரம் வைத்து பயிரிட்ட வாழையில் அதிக மகசூல் கிடைத்தது.

அதன் பிறகு காய்களை அறுவடை செய்து தரம் பிரித்து லாரிகள் மூலம் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி விற்பனை செய்தேன். இதன் மூலம் மண் இறுக்கம் இல்லாமல் எப்போதும் பொல பொல தன்மையுடன் இருந்தது. இதன் வாயிலாக சாதாரண நிலையில் வாழை பயிரிடுவதை விட 2 மடங்கு கூடுதல் மகசூல் பெற முடிந்தது. அதே நேரத்தில் நல்ல விலையும் கிடைத்ததால் நிறைவான லாபத்தையும் பெற முடிந்தது.

இவ்வாறு விவசாயி பழனிச்சாமி கூறினார்.

### தட்டுப்பாட்டை தவிர்க்கும்

## உலர் தீவன மேலாண்மை முறைகள்

பசு மாடுகளின் பால் உற்பத்தி குறையும் காலங்களில், விவசாயிகள் அடர் மற்றும் பசுந்தீவனங்களை குறைத்து உலர் தீவனங்களை பசுக்களுக்கு அளிப்பது வழக்கம். இதுபோன்ற நேரங்களில் விவசாயிகள் சோளத்தட்டை, கம்பந்தட்டை, ராகித்தாள் மற்றும் வைக்கோல் ஆகியவற்றை காய வைத்து போரடித்து போதுமான அளவு சேமித்து கொண்டு, அவ்வப்போது கறவைகளுக்கு அளிப்பார்கள்.

**சுவையான தீவனங்கள்**

இந்த உலர் தீவனங்களுடன் செறிவூட்டப்பட்ட சுவையான தீவனங்களை பசுக்களுக்கு அளிப்பதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். அந்த வகையில் கரும்பு மொலாசஸ் அல்லது பழைய சர்க்கரை 10 சதவீதம், தாது உப்புகள் 2 சதவீதம், சாப்பாட்டு உப்பு 1 சதவீதம், வைட்டமின் கலவை போதுமான அளவு எடுத்து தண்ணீரில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உலர் தீவனங்களை போரடிக்கும் போது, ஒரு அடி உயரத்துக்கு ஒரு அடி உயரம் தீவனத்தின் மேல் மேற்கண்ட கலவையை சீராக தெளித்து உலர் தீவனப்போர் வேய்ந்து வைத்துக்கொண்டு, தேவையானபோது பசுமாடுகளுக்கு அளிக்கலாம். இதன்மூலம் தீவனத்தின் சுவை அதிகமாவதால் பசுமாடுகள் விரும்பி சாப்பிடும். இதனால் பசுக்களின் பால் உற்பத்தி கூடுதலாகும். சினை நிற்காமை, ஊட்டச்சத்து குறைபாடு போன்ற பிரச்சினைகள் வராது.

**தட்டுப்பாட்டை தவிர்க்கலாம்**

இந்த உலர்தீவன சத்தூட்ட முறையை பின்பற்றுவதால் செலவு குறைவு. மேலும் நீண்ட நாட்களுக்கு சேமித்து வைத்து பயன்படுத்துவதால் வறட்சி காலங்களில் தீவன தட்டுப்பாட்டை தவிர்க்கலாம். இதற்கு மாற்றாக இதற்கு மாறாக பஞ்ச காவ்யா கரைசலையும் பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறலாம்.

**–தகவல்: ஏ.வெங்கடேஷ், முத்துகுமார் நகர், ரத்தினபுரி, கோவை.**

## இருதய பலவீனத்தை குணப்படுத்தும் ‘தும்பை’



வயல்வெளி மற்றும் சாலை ஓரங்களில் தானாகவே வளரும் தன்மை கொண்ட தாவரம் தும்பை. இவற்றில் பெருந்தும்பை, சிறுதும்பை, கருந்தும்பை, மலை தும்பை, பேய் தும்பை, கசப்பு தும்பை, மஞ்சள் தும்பை என்ற வகைகள் உண்டு. இதில் ஸ்டீரால்கள், ஆல்கலாய்டுகள், ஒலியானலிக் மற்றும் உர்காலிக் அமிலம், சிட்ரோஸ்டீஸ் என்ற வேதிப்பொருட்கள் உள்ளது. இவை பல்வேறு நோய்களை குணப்படுத்தப்படுத்த வல்லது.

அதன்படி தும்பையுடன், மிளகு கலந்து சாப்பிட எந்தவிதமான விஷக்கடியும் முறியும். தும்பை பூ, ஆடு தீண்டா விதை, அரைத்து பாலில் கலந்து சாப்பிட ஆண்மை அதிகரிக்கும். தும்பைச்சாறு, முசுமுசுக்கை சாறு, வல்லாரைச்சாறு, சீரகம் ஆகியவற்றை தனித்தனியே அரைத்து சூரணம் செய்து சாப்பிட்டு வர இதய பலவீனம் குணமடையும். மஞ்சள் காமாலை நோயையும் குணப்படுத்தும்.

தும்பை பூ, ஊமத்தம்பூ ஆகியவற்றை அரைத்து நெய்யில் கலந்து தொடர்ச்சியாக காதில் ஒரு சொட்டு விட்டு வர காதில் புண், சீல் வடிதல், இரைச்சல் தீரும். இவை சாதாரணமாக 1 அடி முதல் 3 அடிவரை வளரும் தன்மை கொண்டது.

எந்தவகை மண்ணாக இருந்தாலும் செழித்து வளரக்கூடியது. மருத்துவ பயனுக்காக இவை நாடுமுழுவதும் உள்ள குறிப்பட்ட சில மாநிலங்களில் தேவைக்கு ஏற்ப இடம் அமைத்து சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இவை விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படும் தாவரம் என்பதால், நடவு செய்த 5 மாதத்தில் செழிப்பாக வளர தொடங்கி விடும்.